**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**முன்னிலை : திருமதி. கா. பாரதி , M.L.,**
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**

**2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 01 ஆம் நாள், வெள்ளிக்கிழமை**

**இ.ம.எண். 1/2022**

**இன்**

**அ.வ.எண். 30/2022**

கலைச்செல்வி ----- மனுதாரர் /Proposed 2-ம் வாதி

வேலுச்சாமி (இறப்பு) ----- வாதி

/எதிர்/

1. கருப்பாத்தாள் ----- 1-ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி

2. தனசேகரன் ----- 2, 3 எதிர்மனுதாரர்கள்/Proposed

3. குமரேசன் 2, 3 பிரதிவாதிகள்

இந்த மனுவானது 01.08.2023 ஆம் தேதியன்று என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்/Proposed 2-ம் வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் S. ஜெயராமன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருவாளர்கள் K. திருமலைசாமி மற்றும் V. வீரக்குமார் ஆகியோர் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## உத்தரவு

26.07.2022 ஆம் நாள் இறந்துபோன வாதி வேலுச்சாமிக்கு அவருடைய வழக்குச் சொத்துக்களில் பாதி சொத்தினை உயில் ஆவணம் மூலம் உரிமை பெற்றவரான மனுதாரரை சட்டப்படியான பிரதிநிதி (Legal Representative) என்ற முறையில், அசல் வழக்கில் 2-ம் வாதியாகவும், இறந்துபோன வாதியின் மக்களை 2, 3 பிரதிவாதிகளாகவும் சேர்த்துக்கொள்ளக்கோரி தாக்கல் செய்துள்ள மனுவை 26.10.2022 ஆம் நாளுக்குள் தாக்கல் செய்யாததால் ஏற்பட்டுள்ள அபேட்மெண்ட் உத்திரவை ரத்து செய்துகொள்ள வேண்டி சி.பி.சி. ஆர்டர் 22 ரூல் 9-ன்படி மனுதாரர்/Proposed 2-ம் வாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்/Proposed 2-ம் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டின் சுருக்கம்:-**

மனுதாரர் உத்தேச 2-ம் வாதியாக வழக்கானது வாதி வேலுச்சாமியால் அவரது

மனைவிக்கு எதிராக பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்யப்பட்டதில், வாதி வேலுச்சாமி உயிருடன் இருந்தபோது அவரது சகோதரி மகளான மனுதாரருக்கு 27.05.2022 அன்று உயில் ஆவணத்தை ஏற்படுத்தி வைத்துவிட்டு, 26.07.2022 அன்று இறந்துவிட்டார். எனவே வேலுச்சாமியின் சட்டப்பூர்வமான பிரதிநிதியாக இருந்து வழக்கை நடத்துவதற்காக மனுதாரரை 2-ம் பிரதிவாதியாக வழக்கில் சேர்த்தும், வாதியின் மக்களை 2, 3 எதிர்மனுதாரர்களை பிரதிவாதிகளாகவும் சேர்த்து உத்தரவிடவேண்டும்.

**3. 2-ம் எதிர்மனுதாரர்/உத்தேச 2-ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, 1-ம் எதிர்மனுதாரர்/ 1-ம் பிரதிவாதி மற்றும் 3-ம் எதிர்மனுதாரர்/உத்தேச 3-ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்உரையின் சுருக்கம் பின்வருமாறு:-**

2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் 1-ம் பிரதிவாதியின் வாரிசுகள். வழக்கின் வாதி வேலுச்சாமி 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்களின் தகப்பனார். வழக்கு சொத்துக்களில் 2, 3 எதிர்மனுதாரர்களின் தாயாரும், வாதி வேலுச்சாமியும் கூட்டாக கிரையம் பெற்றதாகவும், வாதி, 2, 3 எதிர்மனுதாரர்களின் தாயார் மீது பாகப்பிரிவினை கோரி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், அசல் வழக்கு நிலுவையில் இருக்கும்போது வாதி வேலுச்சாமி இறந்துவிட்டதாகவும் அவர் எழுதிவைத்ததாகச் சொல்லப்படும் உயில் ஆவணத்தின் மூலம் தான் சொத்துக்களை அடைந்துவிட்டதாகச் சொல்லி மனுதாரர் கலைச்செல்வி அசல் வழக்கை நடத்தக்கோரி மனு தாக்கல் செய்துள்ளார். 2, 3 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் தனக்கு பூர்வீக வழியில் கிடைத்த விவசாயத் தோட்டம் உள்ளிட்ட சொத்துக்களை விற்பனை செய்தும், வாத்து, கோழிகள் வாங்கி வியாபாரம் செய்து வட்டி, வரவு செலவு செய்தும் சம்பாதித்த பணத்தையும், நில வியாபாரம், நெல் வியாபாரம் கிடைத்த பணத்தை கொண்டும், 2, 3 எதிர்மனுதாரர்களின் தாயாரின் 25 பவுன் நகைகளை விற்றும் வழக்குச் சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளார். 2, 3 எதிர்மனுதாரர்களும் அவர்களது உடல் உழைப்பை கொடுத்து தொழில் நடத்தி வந்துள்ளனர். எனவே இறந்துபோன வாதி வேலுச்சாமி மற்றும் கருப்பாத்தாள் பெயரில் சொத்துக்கள் வாங்கப்பட்டபோதும், அவை பொதுக்குடும்ப சொத்துக்களாகும். எனவே மனுதாரர் கலைச்செல்வி பெயருக்கு உயில் ஏற்படுத்தியதாகச் சொல்வது உண்மையல்ல. சொத்துக்களை அபகரிப்பதற்காக அவர் மோசடியாக உயில் ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளார். எனவே மனுவை தள்ளுபடி செய்யவேண்டியது அவசியமாகும்.

4. இந்த மனுவில் இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால், இந்த மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**6. தீர்வு:-**

மனு, எதிர்உரை மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. வாதி வேலுச்சாமி இறந்துவிட்டபடியால் அவர் மனுதாரருக்கு உயில் ஆவணம் ஏற்படுத்தி வைத்துள்ளதால் மனுதாரரை வாதியின் சட்டப்படியான பிரதிநிதி என்ற முறையில் 2-ம் வாதியாக இருந்து வழக்கை நடத்த வழக்கில் சேர்க்கவேண்டுமென்றும், வாதியின் மக்கள் என்ற முறையில் 2, 3 எதிர்மனுதாரர்களை 2 மற்றும் 3 பிரதிவாதிகளாக வழக்கில் சேர்க்கவேண்டுமென்று மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் தான் வாதியின் சகோதரியின் மகள் என்றும், தனக்கு வாதி வேலுச்சாமி உயில் ஏற்படுத்தி வைத்துள்ளதாகவும் தெரிவித்து மனு தாக்கல் செய்துள்ளபடியால் மனுதாரருக்கு மேற்படி உயில் ஆவணத்தை நிரூபித்து வழக்கை நடத்த ஒரு வாய்ப்பு அளிக்கவேண்டுமென்றும், அதேசமயம் இறந்துபோன வேலுச்சாமியின் மகன்களான 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்களையும் 2, 3 பிரதிவாதிகளாக வழக்கில் சேர்த்து அசல் வழக்கை நடத்த வேண்டுமென்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக இம்மனு அனுமதிக்கப்பட்டு, மனுதாரர் கலைச்செல்வியை 2-ம் வாதியாகவும், 2, 3 எதிர்மனுதாரர்களை 2, 3 பிரதிவாதிகளாகவும் வழக்கில் சேர்க்க அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 01 ஆம் நாளாகிய இன்று பகரப்பட்டது.

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2023.09.05 17:54:13 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**பழனி.**

**மனுதாரர்/Proposed 2-ம் வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

**எதிர்மனுதாரர்கள்/Proposed 2, 3 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2023.09.05 17:54:20 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**பழனி.**